Enna Panna Solgirai

Ayyappa · Tamil

பல்லவி

என்ன பண்ண சொல்கிறாய்
(என்னை) என்ன பண்ண சொல்கிறாய் ஐயப்பா
எந்தன் நெஞ்சம் உன்னையே நாடுதே ஐயப்பா

அனுபல்லவி

எந் நாளும் உன்னையே துணையாய் ஐயப்பா
எந்தன் உள்ளம் உன்னையே கொண்டதே ஐயப்பா
(என்னை என்ன)

சரணம் 1

கஷ்டங்களை இஷ்டம்போல் தருகிறாய்
அதை எட்டி நின்று, வேடிக்கையும் பார்க்கிறாய்
எத்தனை நாள் இந்த நிலை பார்க்கிறேன்
உன்னை என்றும் விடமாட்டேன் ஐயப்பா
(என்னை என்ன)

சரணம் 2

குற்றம் பலதும் செய்து விட்டேன் ஐயப்பா
நீ சற்று அதை பொறுத்திடாய் ஐயப்பா
உற்றார் என்னை கேலி செய்ய வைத்திடாய்
உற்ற துணையாய் என்னை காத்திடாய்
(என்னை என்ன)